[1973 நவம்பர் 30

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இவ் வேலையை சிறப்பு கிராமச்சாலைத் திட்டத்தின் இரண்டாவது படிவத்தில் சேர்த்து செயல்படுத்த அரசு ஏற்கனவே அனுமதித்துள்ளது.

மாஞமதுரை ஒன்றியத்திலுள்ள சாலைகள்

*** 523 விஞ—திரு. த. சோணையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மாஞமதுரை ஊராட்சி ஒன்றியம், வேம்பத்தூருக்கு தார்ச்சாலை போடும் திட்டம் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இராமநாதபுரம் மாவட்டம், மாஞமதுரை ஊராட்சி ஒன்றியம் பெரியகோட்டை-வேம்பத்தூர் சாலையைத் தார்ச்சாலையாக மாற்றி, சீர் செய்ய அரசு 17–6–1972 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை ஆணை என் 1212-ல் ஆணையிட்டுள்ளது.

(இ) அதன் மதிப்பீடு ரூபாய் 1,25,500.

*** 524 விஞ—திரு. த. சோணையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மாஞமதுரை ஊராட்சி ஒன்றியம், கீழ்ப்பசலைக்கு தார்ச்சாலை போடும் திட்டம் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோணையா : தலைவர் அவர்களே, அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டிருக்கிற ரோடு வேலைகள்கூட நடப்பதிலே கால தாமதம் ஏற்படுகிறது. உடனடியாக வேலை செய்வதற்கு உத்தர விடுவார்களா? மேலும் கடைசியில் சொன்ன கீழ்ப்பசலை

1973 நவம்பர் 30]

கிராமத்தில் இரண்டாயிரத்திற்கும் மேல், மூவாயிரம் வரை ஜனத்தொகை இருக்கிறது. ஆகவே 1,500 ஜனத்தொகைக்கு மேற்பட்ட கிராமச் சாலைகளைப் போடும் திட்டத்தின் கீழ் இதையும் சேர்த்து கீழ்ப்பசலைச் சாலையை தார்ச் சாலையாக ஆக்கித்தர உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, இந்த கீழ்ப்பசலை சாலை 2.6 கிலோ மீட்டர் உள்ளதாகும். இது தார் போடப்பட்ட ஊராட்சிச் சாலையாகும். இந்தச் சாலையின் முக்கியத்துவத்தைப் பொறுத்து, மற்ற ஊராட்சிச் சாலைகளோடு எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்று தலைமைப் பொறியாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ் வடிவேல்: தலைவர் அவர்களே, இந்த ஊரகச் சாலையை அமைப்பது மிக நல்ல திட்டமாக இருந்தாலும் கூட, அந்தச் சாலைக்கு இணைப்பாக அரிசனத் தெருக்கள் குறுக்கிட்டால், அந்தச் சாலையைப் போடவேண்டுமென்று அரிசன நல இலாகாவிலே கருதினால்கூட, அதற்கு மிராசுதார்கள் மறுப்பு தெரிவிக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலங்களை கட்டாயமாக ஆர்ஜிதம் செய்து, அந்தச் சாலையை இணைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அரிசனத் தெருக்கள் இருந்தால் உடனடியாக இணைக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. இடையிலே நிலக்காரர்கள் செய்கின்ற தகராறுகள் காரணமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதைப்பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, in Dharmapuri district which is a hilly area, there are a number of roads which require urgent repairs. When we ask the Panchayat Union, they say that they have no funds. When we ask the Public Works Department, they say that they do not come under their jurisdiction. When we appeal to the Collector, he does not know whom he should ask. So, may I know whether the Hon. Minister will take necessary action to see that these roads are metalled and black-topped through a proper agency?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஊராட்சி வளர்ச்சித் துறை மூலமாகப் போடப்படுகின்ற சாலைகள் எல்லா மாவட்டங்களுக்கும்தான் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட சில சாலைகள் சேர்க்கப்படவில்லையென்று தெரிவிப்பார்களானால், அதுபற்றி பரிசீலிக்கப்படும். குறிப்பாக, தர்மபுரி மாவட்டத்திற்காக ரூ. 2 கோடி திட்டத்தின்கீழ் பல புதிய சாலைகள் போடப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே அந்த கீழ்ப்பசலை சாலைக்கு செல்கின்ற வழியிலே 4 கிராமங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் சேர்த்தால் ஏறத்தாழ 4,000 ஜனத்தொகை வருகிறது. அங்கெல்லாம், அதிகாரிகள் ஜீப்பிலே கூடச் செல்ல முடியவில்லை. இதனால், தொகுதியைச் சுற்றிப் பார்க்கக்கூட முடியவில்லை. அவ்வளவு மோசமாக இருக்கிற காரணத்தால், அந்தச் சாலையை உடனடியாகப் போட அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, சமீபத்திலே முதலமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு கருத்தையே தெரிவித்து இருக்கிறார்கள். 1,500 மக்கட் தொகை இல்லாவிட்டால், அந்தப் பஞ்சாயத்தைச் சேர்ந்த 4, 5 கிராமங்கள் இருக்குமானால், அவைகளையும் ஒன்றாக இணைத்து 1,500க்கு மேல் வருகிறது என்று சேர்த்து, அவற்றையும் இதில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள்—யோசனை தெரிவித்தார்கள். அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கும்முடிப்பூண்டித் துணை வட்டத்திலுள்ள சாலைகள்.

***525. வினா—திரு. கா. வேழவேந்தன்** : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், தேர்வாய் கிராமம் முதல் பாலவாக்கம் வரை கரடிபுத்தூர் கிராமத்தின் வழியே பஸ் செல்லும் பாதையை, கிராமச்சாலைச் சிறப்புத் திட்டத்தின் கீழ் தார்ச்சாலையாக்கும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா ?